1994 மே 3]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், தன்னுடைய திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. பெரியார் மாவட்டத்திலிருந்து இதுபோன்ற கோரிக்கை, அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் மூலமாக இன்றுவரை அரசுக்கு வரவில்லை. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர், இதுபோன்ற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அவர் கோரிக்கையை அரசுக்கு அனுப்புவார் என்று சொன்னால், அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 491, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

491—

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புளிய மரங்களைப் பயிரிடுதல்

*24811—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சதைப்பற்றுள்ள உரிகம் புளியமரங்களை வேளாண் காடுகளிலும், ஊரக வளர்ச்சித் திட்டங்களின் கீழும் பயிரிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993–94ஆம் ஆண்டு முதல் சதைப்பற்றுள்ள உரிகம் புளியமரக் கன்றுகள் ''சிடா'' வேளாண்மைக் காடுகள் திட்டத்தின் கீழ், வேளாண்மைத் துறையினரால் பயிரிடப்பட்டு வருகின்றன. உரிகம் புளிய மரக்கன்றுகளை 1993–94ஆம் ஆண்டு முதல் அதிக அளவில் சமுதாயத் தோப்புகளில் நட திட்டமிடப்பட்டு செயல்படுததப்பட்டு வருகிறது. மேலும், இம்மரக்கன்றுகள் தர்மபுரி மாவட்டத்தில் ஒசூர், தென்கனிக்கோட்டை, அரூர் ஊத்தங்கரையிலும் சேலம் மாவட்டத்தில் மேட்டூர், ஆத்தூர், இராசிபுரம், நாமக்கல்லும், பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் கோபியிலும் பயிர் செய்யப்பட்டுள்ளன.

முற்பகல் 10-35

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதைப்பற்றுள்ள இந்தப் புளியமரக் கன்றுகளை மூன்று மாவட்டங்களிலே பயிரிடுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மேலும், தமிழகம் முழுவதும் பயிரிடுவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1994 மே 3

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரிகம் புளிய மரம் என்பது, தர்மபுரி மாவட்டத்திலே தென்கனிக்கோட்டை வட்டம் ஊரிகம் என்ற கிராமத்தில் உச்சிரப்பா என்பவருக்குச் சொந்தமான மரமாக இருக்கிறது. ஒரே ஒரு மரம். அந்த ஒரு மரம் பார்ப்பதற்கு அதிக எண்ணிக்கை உடைய காய்களையும், பழங்களையும் வித்தியாசமான நீள அளவிலே, எடை கூட சற்று கூடுதலான அளவிற்கு, புளியம் பழங்கள் காய்த்திருந்தன. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் எல்லாம் இதை வேடிக்கைக்காக போய்ப் பார்த்தார்கள். அதே நேரத்தில் மூட நம்பிக்கையோடு இறைவன் அந்த மரத்திலே இருக்கிறான் என்றும் அல்லது இறைவனுக்கு எதிர்மறையாக இருக்கக்கூடிய பேய், பிசாசுகள் அந்த மரத்திலே இருக்கின்றன, எனவேதான், அந்த அளவிற்கு அது காய்த்திருக்கிறது என்று அந்த மக்களை பார்ப்பதற்கே கூட அனுமதிக்கவில்லை. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவருடன் பல்வேறு அணுகுமுறை வாயிலாக வேளாண் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள் சென்று ஆராய்ச்சி நடத்தி, அந்த ஆராய்ச்சியில் வெற்றி பெற்ற பிறகு அந்த மரக் கன்றுகளை அதிக அளவிலே அதாவது தர்மபுரி மாவட்டத்திலும், அரசு தோட்டக்கலைப் பண்ணையிலும் 25 ஆயிரம் மரக் கன்றுகளும், மற்றும் திம்மாவரம் பண்ணையில் 15 ஆயிரம் மரக் கன்றுகளும், அதனைப் போல் தர்மபுரியில் 25 ஆயிரம் மரக் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு முழுவதும் வறட்சி மிகுந்த பகுதிகளில் பயிரிட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபோது ஒரு தனிப்பட்ட புளியமரம் தனியாருக்குச் சொந்தமானதாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார். அதை அரசே எடுத்துக்கொண்டு அந்த புளியமரத்து விதைகளை ஊன்றி மேலும், பல மாவட்டங்களிலே பயிரிடச் செய்வதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதையும் அதே நேரத்தில் இந்தப் புளியமரத்தில் உருவானபுளி திருச்சியிலே கண்காட்சியிலே பரிசும் பெற்றிருக்கிறது; எனவே, இதற்கு முன்னுரிமை வழங்கி இந்த நிதியாண்டிலேயே தக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புளியமரத்தை அரசு எடுக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்று சொன்னால், விதைகளைத் தேவையான அளவிற்கு நாம் பெற்றிருக்கிறோம். அந்த விதைகளிலிருந்து நாற்றுகளை உருவாக்கி அதிக நாற்றங்கால்களை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, வேண்டிய அளவிற்கு நாற்றங்கால்களை இன்றைக்கு வேளாண்மைத் துறையினுடைய தோட்டக் கலை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. எனவே, அந்த மரம் தேவையில்லை.

இருக்கக்கூடிய நாற்றங்கால்களை வைத்துப் போதிய அளவில், வேண்டிய அளவிற்கு நாம் நாற்றங்கால்களை உருவாக்கிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. வெங்கடராம ரெட்டி.

THIRU M. VENKATARAMA REDDY: Hon'ble Speaker Sir, this Urigam tree is situated in my Constituency and I have seen the tree. This is old and this is only one tree as was said by the Hon'ble Minister and this tree is more than 100 years old. It is likely to fall down because a river is passing adjacent to this tree and it is likely to fall down. Whether the Hon'ble Minister and the Government would come forward to direct the District Collector to put a bund adjacent to the tree so that we can get the seeds for another 10 or 15 years. This is a rare variety. Each fruit is 1 foot to 1—½ feet long. So, I would like to know whether this Government would come forward to put up a bund to the river adjacent to the tree to protect the tree from falling down.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இந்த ஒரு பழமானது 100 முதல் 200 கிராம் எடையுள்ளது. ஒரு பழத்திலே 10-லிருந்து 15 விதைகள் இருக்கக்கூடிய அளவிற்கு நீளமான பழங்கள். எனவே, இந்தப் பழங்களைப் பார்த்ததற்குப் பின்னாலேதான் ஒரு ஆராய்ச்சியை வேளாண்மைப் பல்கலைக் கழகம் நடத்தியது, நடத்தி வெற்றி கண்டது. இன்றைக்கு ஆற்றங்கரையில் மட்டுமல்ல தமிழக அரசினுடைய பள்ளிகளுடைய சின்னமாகக் கூட புளியமரத்தை இன்று கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, பள்ளிகளுக்குக்கூட இதுபோன்ற மரத்தைத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. புதிய இடங்களிலே, தேவையான இடங்களிலே, வறட்சி மிகுந்த பகுதிகளிலே மரக்கன்றுகளைப் பயிரிடுவதற்கு அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மாண்புமிகு அமைச்சர், அவர் கேட்டது அந்தப் புளியமரத்திற்குப்பக்கத்தில்ஒருஆறுஇருக்கிறது. அதனால், அரிப்பு ஏற்படுகிறது. அந்த மரம் விழக்கூடிய நிலைமையிலே இருக்கிறது. எனவே, உடனடியாக அந்த மரத்தையொட்டி ஒரு பெரிய தடுப்புச் சுவர் ஒரு ''பண்ட்'' கட்டுவீர்களா என்றுதான் கேட்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரமே தனியாருக்குச் சொந்தமானது. தனியாருடைய நிலத்திலே இருக்கிறது. அவர்கள் விரும்பித் தருவார்களேயானால் பாதுகாப்பைச் செய்து தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

முற்பகல் 10-40

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிகம் புளியமரம் 100 ஆண்டுகளில் என்ன காய்க்கிறதோ அதைவிட அதிகமாக ஒரு ஆண்டுக்கு 2,000 கிலோ புளி காய்க்கிற மரம் என்னுடைய தொகுதியில் முள்ளுப்பாடி என்ற இடத்தில் இருக்கிறது. அங்கே ஒரு மரம் இருக்கிறது. அதன் வயது 45. அதை வனவியல் துறை ஜெனடிக்ஸ் டிப்பார்ட்மென்ட்டிலிருந்து அதனுடைய விதைகளை எடுத்துச்சென்று, ஒட்டெடுத்துச்சென்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மரத்தையும் வேளாண்மைத்துறை மூலமாக ஆராய்ச்சி செய்து, அந்த மரங்களினுடைய கன்றுகளை விரிவாக்கம் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? உரிகம்புளி போன்ற இந்த மாதிரி புளிய மரங்களைப் பொறுத்த வரையில் விதையின் மூலமாக வருகின்ற கன்றுகளைக் கொடுப்பதற்குப் பதிலாக ஒட்டெடுத்துக் கொடுத்து அதிகமாகக் காய்க்க நடவடிக்கை எடுத்து எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளிய மரத்தினுடைய ஆராய்ச்சியைப் பொறுத்த வரையிலே இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம்தான் முன்னணியில் நின்று வெற்றி பெற்றிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுக்கு நன்கு தெரியும். அதுபோல் இன்றைக்கு பெரியகுளப் பகுதியில் உள்ள தோட்டக் கலைக் கல்லூரியில் பி.கே.எம். 1 என்ற புளிய மரக் கன்றுகளைத் தருகிறோம். கிராமத்திலே கூட ஒரு பழமொழி சொல்வார்கள். பிடித்தாலும் புளியம் கொம்பாகப் பிடிக்க வேண்டும் என்று சொல்வார்கள், அந்த அளவுக்கு வலுவான கொம்புகளை உடையது புளியமரம். ஆனால் புளிய மரங்கள் காய்க்கக்கூடிய காய்களைத் தாங்க முடியாமல் ஒடிந்து விழக் கூடிய அளவுக்கு இந்த பி. கே. எம். புளிய மரங்கள் இருக்கின்றன. அந்த மரத்திற்கு ஏறத்தாழ 100 சப்போர்ட் குச்சிகளை வைத்துத் தாங்க வேண்டி இருக்கிறது. அந்த அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே இன்றைக்கு இந்த புளியங் கன்றுகளைப் பொறுத்தவரையில் ஒட்டுக்கட்டுவதன் வாயிலாகத்தான் கன்றுகள் எடுத்து தமிழக விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டு வருகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வறட்சியான பகுதிகளில் வைக்கக்கூடிய மரம் புளிய மரம். காவிரி பாய்ந்து கொண்டிருக்கிற நிலத்தில் போய் புளிய மரத்தை நட்டு ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும். திரு. எஸ். ஆசைமணி.

1994 மே 3]

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 4-12-1993 அன்று அடித்த புயலின்போது எங்களுடைய நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் 7,800 புளிய மரங்கள் விழுந்து விட்டதாக உதவி இயக்குநர், தோட்டக்கலை அவர்கள் அரசுக்குத் தகவல் அனுப்பி இருக்கிறார்கள். இது ஒரு உண்மையான கணக்கு. இந்த மரங்களுக்கு பதிலாக குறுகிய காலத்தில் காய்க்கக் கூடிய புளிய மரங்களை அங்கே நடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியங் கன்றுகள் அதிக விளைச்சல் தரக் கூடியவை. இந்தப் புளிய மரங்கள் மூன்றரை ஆண்டுகளில் காய்ப்புக்கு வரக் கூடிய தன்மை கொண்டவையாகும். அந்த ரக புளியங் கன்றுகளை இந்த ஆண்டு 35 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள். நிதியும் தந்திருக்கிறார்கள். எனவே அந்தக் கன்றுகளை அந்தப் பகுதியில் நடுவதற்கு விவசாயிகள் முன் வந்தால் அவர்களுக்குத் தரப்படும். அதைப் போல சாலையோரங்களில் நடுவதற்கும் பொதுப் பணித் துறையைச் சார்ந்தவர்கள் நடவடிக்கை எடுத்தால் அவர்களுக்கும் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 492, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

492—

அயல் நாட்டில் வாழும் இந்தியரின் நிதி உதவி மூலம் தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் துவங்குதல்.

*11897— திரு. கே. செல்வராஜ்:
மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய தொழில் தொடங்குவோர், வெளிநாட்டில் வாழும் இந்தியரின் நிதியைப் (NRI) பெற, அரசு தனிப் பிரிவு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் என்ற ஓர் அமைப்பு மாநில அரசால் 1992ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தங்களது நிதியை தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்குத் தேவையான தகவல்களையும், அறிவுரைகளையும் வழங்கி வழிகாட்டி வருகிறது.